Lions Club of

# Erode Supreme

Official Bulletin - Sep - Oct 2022



GEM
HOSPITAL

# EXCLUSIVE DEPARTME OR
# ROBOTIC CANCER SURGERY

IMUM CURE







To know more visit
***robotic.gemhospitals.com***

## A new era in Cancer Care

45, Pankaja Mill Road, Ramanathapuram, Coimbatore - 641 045

# தலைவர் உரை



அன்பும் நற்பண்பும் மிக்க அரிமாக்களுக்கு வணக்கம்.

நமது சுப்ரீம் அரிமா சங்கத்தின் முதலாவது இதழை வெளியிடுவது பெரும் மகிழ்ச்சி தருகிறது. இதன் மூலம் எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் பேரானந்தம் கொள்கிறேன்.

நமது சங்கத்தின் பதவியேற்பு விழா 8.7.22 வெள்ளிக்கிழமை அன்று ஈஸ்வரமூர்த்தி மஹாலில் சீரோடும் சிறப்போடும் நடந்தேறியது. விழா பலரும் பாராட்டும் வண்ணம் நடைபெற்றதற்கு முழுக் காரணமாக விளங்கிய நம் பன்னாட்டு இயக்குனர் அரிமா Er.K.தனபாலன் மற்றும் நமது மாவட்ட முன்னாள் ஆளுநர் அரிமா D.ரவிச்சந்திரன் ஆகியோருக்கு என் இதயம் கனிந்த நன்றியினை காணிக்கையாக்குகின்றேன். மேலும் விழாவின் வெற்றிக்கு வித்திட்ட திட்டத் தலைவர் அரிமா M.கார்த்திக், திட்டத் துணைத் தலைவர் அரிமா P.குணசேகரன் மற்றும் இணைந்து செயல்பட்ட விழா குழுவில் உள்ள அனைத்து அரிமாக்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது முதல் சேவைத் திட்டமாக யதுன் பெண் குழந்தைகள் காப்பகத்திற்கு உபகரணங்கள் வழங்கும் விழா 7.7.22 இல் நமது PID அவர்கள் முன்னிலையிலும் நமது PDG அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முக்கிய பங்களித்த நமது பட்டயத்தலைவர் அரிமா K.குமாரசாமி அவர்களுக்கும் கலந்து கொண்ட அரிமாக்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

நமது முக்கிய சேவைத் திட்டமான இலவச கண் சிகிச்சை முகாம் 10.7.22-ல் ஈரோட்டிலும் 17.7.22 கணபதிபாளையம் மற்றும் அரச்சலூரிலும் நடைபெற்றது. மூன்று முகாம்களிலும் 311 IOL பெறப்பட்டது. அதில் கலந்து கொண்ட மாவட்ட பொறுப்பாளர் அவர்களுக்கும் மற்றும் அரிமாக்களுக்கும் நன்றிகள் பல. மேலும் காசிபாளையம் ஆரம்பப் பள்ளியில் 5.8.22 ல் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் நமது PID தலைமையில் நமது மாவட்ட ஆளுநர் திறந்து வைத்தார். 15.8.22 ல் 75வது சுதந்திர தினவிழா சிறப்பாக நடந்தது. சேவை திட்டங்களுக்கு பொருள் உதவி செய்த நல் உள்ளங்களுக்கு எல்லாம் நன்றி நன்றி.

இதுவரை 12 ஜோடி கண்களை தானமாக பெற்று சங்கத்திற்கு பெருமை சேர்க்கும் கண்தான குழு தலைவர் அரிமா E.சத்தியமூர்த்தி அவர்களுக்கும் இல்லம் தோறும் சென்று பிறந்தநாள் வாழ்த்து கூறி ரூ.23,800/- சங்கத்திற்கு பொருளீட்டிக் கொடுத்த அரிமா தேவராஜ் அவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

என்றும் அன்புடன்
அரிமா **M.ராமசாமி** ஆசிரியர்

*Try not to become a man of success, but rather try to become a man of value*

# செயலர் அறிக்கை



அரிமா **N.வஜ்ரவேல்**
செயலாளர் நிர்வாகம்



அரிமா **P.ரமேஷ்**
செயலாளர் சேவை

அன்பு அரிமாக்களே!

முதலாவது சங்க இதழின் மூலம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். 324E அரிமா மாவட்டத்தில் பெருமைமிகு சங்கத்தில் எங்களை செயலர்களாக நியமித்த உங்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். பதவியேற்பு விழா நிகழ்வுகள் நிகழ்முறைக் கூட்டங்கள், இலவச கண் சிகிச்சை முகாம்கள், யதுன்ஸ் பெண்கள் காப்பகத்திற்கு உபகரணங்கள் ,காசிபாளையம் தொடக்கப் பள்ளியில் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பு திறப்பு விழா போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு சேவையாற்றியும், நிதி உதவிகளை வழங்கியதற்கும் இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

வரும் மாதங்களில் நடைபெறும் நிகழ்முறை கூட்டத்திற்கும், சேவை திட்டங்களுக்கும் பொருளீட்டு திட்டமான இனிப்பு, பட்டாசு விற்பனையிலும் தங்களுடைய மேலான முழு ஒத்துழைப்பை வழங்கி வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறோம்.

| நாட்கள் | நிகழ்வுகள் |
|---|---|
| 07.07.22 | யாதுன்ஸ் பெண் குழந்தை காப்பகத்திற்கு உபகரணம் வழங்கியது. |
| 08.07.22 | பதவியேற்பு விழா |
| 10.07.22 | இலவச கண் சிகிச்சை முகாம், ஈரோடு |
| 12.07.22 | ஒருங்கிணைந்த இயக்குனர்கள் குழு கூட்டம் |
| 17.07.22 | இலவச கண் சிகிச்சை முகாம், அரச்சலூர் |
| 17.07.22 | இலவச கண் சிகிச்சை முகாம், கணபதிபாளையம் |
| 21.07.22 | இரண்டாவது நிகழ்முறைக் கூட்டம் |
| 04.08.22 | மூன்றாவது நிகழ்முறைக் கூட்டம் |
| 05.08.22 | ஸ்மார்ட் கிளாஸ் திறப்புவிழா காசிபாளையம் தொடக்கப்பள்ளி |
| 08.08.22 | இரண்டாவது இயக்குனர்கள் குழு கூட்டம் |
| 15.08.22 | சுதந்திர தினம் |
| 18.08.22 | நான்காவது நிகழ்மமுறைக் கூட்டம் |
| 18.08.22 | ஏழை மக்களுக்கு உணவு வழங்கியது. |

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

# நம்ம ஈரோடு

திருமூலரின் திருமந்திரத்தில் ‘தமிழ்மண்டிலம் ஐந்து‘ என்று குறிப்பிடப்பட்ட சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் தொண்டை நாட்டையும் கொங்கு நாட்டையும் சேர்த்து நம் தமிழ்நாடு ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. கொங்கு நாட்டை மேலும் 24 நாடுகளாக பிரித்தனர். அதில் முதன்மை நாடக குறிப்பிடப்படும் ‘பூந்துறை நாட்டை‘ 32 ஊர்களாக பிரித்தனர். அவ்வகையில் கொங்கு மண்டலத்தின் மையப்புள்ளியாக இருக்கும் ஊர் நமது ஈரோடு.

ஏறத்தாழ 85 ஆண்டுகள் சிறப்பாய் தமிழ்நாட்டின் ஆட்சியிலும், அரசியலிலும், சமுதாய உணர்வுகளிலும், மக்கள் மனதிலும், வரலாற்று நிகழ்வுகளிலும் கோலூன்றி விளங்கியது ஈரோடு. ஈரோட்டிற்கு பல பெயர்களால் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரணங்களை கொண்டு குறிக்கப்பட்டுள்ளது. அவை ஈரோடை, மயிலை, மறந்தை, கபாலபுரி, நட்டூர், இருங்கோழி, உறந்தை, புறந்தை, மத்யபுரி, திருவரங்கம், மூவேந்த சோழச் சதுர்வேதமங்கலம். நீர் வளமும் நில வளமும் சிறந்து விளங்கும் இவ்வூரில் கனிம வளத்தில் தலைஓங்கி நிற்கிறது. பொன், இரும்பு, செம்பு என்று உலோக வளங்களும், வண்ணக்கற்கள், வைரக்கற்கள், மணிக்கற்கள், பளிங்குக்கற்கள், கருங்கற்கள், வெண்கற்கள் என உலோகம் இல்லாத வளங்களும் வீற்றிருக்கின்றன.




நம்மில் ஒரு வழக்கம் உண்டு தோல்வியடைந்தால் மூக்கறுக்கப் பட்டான் என்று குறிப்பிடுவோம்... ஆனால் நிஜத்தில் 1658 இல் ஈரோட்டில் மக்கள் பலர் மூக்கறுக்கப்பட்டனர். 1638-1659 இல் மைசூர் மன்னன், கண்டீரவ நரச ராஜா வேலூர் மீது படை எடுத்தார். அதை திருமலைநாயக்கர், பீஜப்பூர் மூலம் தடுத்தார். இச்செயலால் சினம் கொண்ட கண்டீரவ நரச ராஜா மதுரை நாயக்கர்கள் மீது படையெடுத்தார்.

சத்யமங்கலத்தை கையகப்படுத்தி முன்செல்ல ஈரோட்டில் எதிர்ப்பு கிளம்பியது. எதிர்ப்பை ஏற்க மறுத்த கண்டீரவன் மைசூர் படை கொண்டு எதிர் வந்த மதுரை வீரர்களை அடக்கி அவர்களையும் ஈரோட்டில் எதிர்ப்பட்ட இளைஞர்கள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என அனைவரின் மூக்குகளை மேல் உதட்டோடு இதற்கென தயாரிக்கப்பட்ட தனிக் கருவிக் கொண்டு அறிந்தனர், அறுபட்ட மூக்குகளை ஸ்ரீரங்கத்திற்கு மூட்டை மூட்டையாக அனுப்பி வைத்தனர்.

# Health Tips

தூங்கும் போது நாசி மற்றும் தொண்டை வழியாக மாறி மாறிசுவாசிப்பதால் குறட்டை ஏற்படுகிறது. சுவாசத்தில் ஏற்படும் இந்த இடையூறு காரணமாக தொண்டையில் உள்ள திசுக்கள் அதிர்ந்து குறட்டை ஒலி எழுப்புகிறது. குறட்டையால் அருகில் உறங்குவோருக்கு தூக்கம் கெடுகிறது. குறட்டை ஏற்பட உடற்பருமன், வாய் / நாசி / தொண்டை கோளாறு, தூக்கமின்மை ஆகியவை காரணமாக இருக்கலாம். தூங்கும் முன் மது அருந்தினால் கூட குறட்டை ஏற்படலாம்.

சத்தமான குறட்டை, அடிக்கடி குறட்டை, தூங்கும் போது மூச்சுத் திணறல், காலை எழுந்தவுடன் தலைவலி, வறண்ட தொண்டையுடன் விழித்தல், ஞாபக மறதி, பகல் நேரத்தில் தூக்கக் கலக்கம் ஆகியவை இருந்தால் மருத்துவரை அணுகவும்.

## குறட்டை தொல்லையிலிருந்து விடுபட உதவும் சில டிப்ஸ், இதோ......



### உடல் எடை குறைக்கவும்

உடற்பருமன் உள்ளவர்கள் குறட்டை விட அதிக வாய்ப்புண்டு. தொண்டை பகுதியில் கொழுப்புத் திசு மற்றும் நலிவான தசை இருந்தால் குறட்டை ஏற்படும். எனவே உடல் எடை குறைப்பது அவசியமாகும்.

### மது அருந்தக் கூடாது

தொண்டை தசைகளை லேசாக்கி குறட்டை ஏற்பட காரணமாக அமைவதால் மது அருந்துவதை தவிர்க்கவும்.

### பக்கவாட்டில் படுக்கவும்

நேராக படுத்தால் குறட்டை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே, பக்கவாட்டில் படுக்கவும்.

### பழங்கள்

உணவில் மெலடோனின் அதிகம் எடுத்துக் கொண்டால் ஆழ்ந்த உறக்கம் பெறலாம். எனவே, மெலடோனின் அதிகம் உள்ள வாழைப்பழம், அன்னாசிப் பழம், கமலாப்பழம் ஆகியவை சாப்பிடலாம்.

### தலை உயர்த்தி படுக்கவும்

தலையணைகள் கொண்டு தலையை உயர்த்தி வைத்து தூங்கவும். தலையை உயர்த்தி வைத்து தூங்கினால் சீராக சுவாசிக்கலாம்.

### புகை பிடிக்காதீர்

சுவாசப் பாதையில் எரிச்சல் உண்டாக்குவதால் புகை பிடிப்பதை தவிர்க்கவும். புகை பிடித்தால் குறட்டை தொல்லை அதிகரிக்கும்.

### தேன், இஞ்சி தேநீர்

எச்சில் சுரக்க செய்வதால் இஞ்சி தொண்டைக்கு இதமளிக்கும். தினமும் 2 முறை தேன், இஞ்சி தேநீர் அருந்தினால் குறட்டை தொல்லை குறையும்.

### தூக்க மாத்திரை வேண்டாம்

அதிகமாக தூங்கினால் குறட்டை ஏற்படும். எனவே, தூக்க மாத்திரைகளை தவிர்க்கவும்.

### பால் குடிக்கலாம், ஆனால்...

பால் மற்றும் பால் பொருட்கள் தொண்டை & நாசியில் வீக்கம் ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகும். பால் குடிப்பதை முற்றிலுமாக தவிர்க்க தேவையில்லை. இருப்பினும், தூங்கும் முன் பால் அருந்த வேண்டாம்.

### தண்ணீர்

உடலில் நீர் பற்றாக்குறையால் சளி உண்டாகிறது. இதனால் கூட குறட்டை ஏற்படலாம். ஆண்கள் நாளொன்றுக்கு 3.7 லிட்டர், பெண்கள் 2.7 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும்.

## "நீண்ட நீண்ட காலம் நீர் நீடு வாழ வேண்டும்
## வானம் தீண்டும் தூரம் நீர் வளர்ந்து வாழ வேண்டும்..."

செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் பிறந்தநாள் காணும்
ஈரோடு சுப்ரீம் அரிமா சங்க உறுப்பினர்கள்

### செப்டம்பர்

| | |
|---|---|
| 01 | அரிமா R. ஜீவாசித்தையன் |
| 10 | அரிமா M. சுரேஷ் |
| 10 | அரிமா E. யுவராஜ் |
| 11 | அரிமா V.A. குணசேகரன் |
| 13 | அரிமா P.S. கார்த்திகேயன் |
| 14 | அரிமா P. சௌடேஸ்வர் |
| 14 | அரிமா S. விஜய் |
| 15 | அரிமா K. கலைச்செல்வி |
| 15 | அரிமா K. ரங்கசாமி |
| 15 | அரிமா S. லோகேஷ்குமார் |
| 15 | அரிமா S. கோகுல் |
| 19 | அரிமா K. மோகன்கிருஷ்ணன் |
| 20 | அரிமா J. தேவகி |
| 23 | அரிமா D. நவநீதம் |
| 24 | அரிமா S. பிரதீக் அகர்வால் |
| 26 | அரிமா S. சுகந்தி |
| 26 | அரிமா A. கவிதா |
| 27 | அரிமா S. ராஜமாணிக்கம் |

### அக்டோபர்

| | |
|---|---|
| 05 | அரிமா M. தமிழரசி |
| 07 | அரிமா D. விக்னேஷ் |
| 07 | அரிமா P. நாச்சிமுத்து |
| 08 | அரிமா R. வல்லரசு |
| 10 | அரிமா S. கணேசன் |
| 10 | அரிமா K. கணபதி |
| 16 | அரிமா A. ரங்கசாமி |
| 19 | அரிமா P. நந்தகுமார் |
| 19 | அரிமா E. சரவணன் |
| 21 | அரிமா A. விஜி அசோக்குமார் |
| 23 | அரிமா E. சண்முகானந்த் |
| 25 | அரிமா S. பிரபு |
| 25 | அரிமா S.S. ரகுநாதன் |
| 27 | அரிமா A. பூபதி ராஜா |
| 28 | அரிமா J. சிவக்குமார் |

### வாழ்த்துதல் குழு

| | |
|---|---|
| அரிமா P. மல்லிகா | - ரூ. 2000.00 |
| அரிமா V. சிவதாஸ் | - ரூ. 500.00 |
| அரிமா K.R. பழனிவேல் | - ரூ. 1000.00 |
| அரிமா R. சாந்தி | - ரூ. 500.00 |
| அரிமா V. சிவக்குமார் | - ரூ. 500.00 |
| அரிமா G. ரங்கசாமி | - ரூ. 600.00 |
| அரிமா ரேணுகாதேவி | - ரூ. 200.00 |
| அரிமா S. குணசேகரன் | - ரூ. 1000.00 |
| அரிமா P. கிருஷ்ணன் | - ரூ. 500.00 |
| அரிமா M. முருகேசன் | - ரூ. 500.00 |
| அரிமா P. கதிரேஷ் | - ரூ. 1000.00 |

### பிறந்தநாளன்று நன்கொடை வழங்கிய நல்உள்ளங்கள் – ஆகஸ்ட் மாதம் 2022

| | |
|---|---|
| அரிமா K. தனபாலன் | - ரூ. 1000.00 |
| அரிமா A.C. ஹரிஹரசுதன் | - ரூ. 7000.00 |
| அரிமா V.K. ஸ்ரீனிவாசன் | - ரூ. 1000.00 |
| அரிமா N. விஸ்வநாதன் | - ரூ. 500.00 |
| அரிமா S. கதிர் | - ரூ. 1000.00 |
| அரிமா P. கதிர்வேல் | - ரூ. 500.00 |
| அரிமா R. கோகிலா | - ரூ. 500.00 |
| அரிமா கீதா ரவிச்சந்திரன் | - ரூ. 1000.00 |
| அரிமா ஆனந்த் பிரபு | - ரூ. 500.00 |
| அரிமா N. முருகேசன் | - ரூ. 500.00 |
| அரிமா K.K. ஆனந்த் மோகன் | - ரூ. 500.00 |
| அரிமா K. தியாகராஜன் | - ரூ. 500.00 |
| அரிமா A.C. ஆறுமுகஜெகதீஸ் | - ரூ. 500.00 |
| அரிமா M. ஆனந்த் | - ரூ. 500.00 |

வாழ்த்துதல் குழுத்தலைவர் தேவராஜ் அவர்களுக்கு பாராட்டுக்கள்



# இலவச கண் சிகிச்சை முகாம்கள்





நமது சங்கமும் கோவை அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து முதலாவது இலவச கண் சிகிச்சை முகாம் 10.7.2022 அன்று ஈரோடு செங்குந்தர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 301 நபர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டதில் 175 நபர்கள் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுத்து கோவை கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்கள்.

2வது இலவச கண் சிகிச்சை முகாம் 17.7.2018 அன்று அரசு மேல்நிலைப்பள்ளி கணபதிபாளையத்தில் நடைபெற்றது. முகாமில் 174 நபர்கள் கலந்து கொண்டதில் 16 நபர்கள் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கோவை கணபதிபாளையம் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். 3வது இலவச கண் சிகிச்சை முகாம் 17.7.2022 அன்று அரசு மேல்நிலைப் பள்ளி அரச்சலூரில் நடைபெற்றது.



107 நபர்கள் கலந்து கொண்டதில் 30 நபர்கள் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கோவை கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இதுவரையில் 311 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சை நம் சங்கத்தின் மூலம் கோவை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்காக உழைத்திட்ட அரிமாக்கள் முன்னாள் தலைவர்கள் நன்கொடை -யாளர்கள் பார்வைக்கு முதலிட குழு தலைவர் அரிமா S.P.சுகுமார் ஆகியோருக்கு இதழின் மூலம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## கண்தானம்

| | | |
|---|---|---|
| 01.07.22 | திரு. ராஜு | அரிமா E.சத்தியமூர்த்தி |
| 05.07.22 | P.S. கோபாலகிருஷ்ணன் | அரிமா K. ஜோதிராமலிங்கம் |
| 05.07.22 | திருமதி. பாவத்தாள் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 07.07.22 | திரு. ராமமூர்த்தி | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 09.07.22 | திரு. G.பாலசுப்பிரமணியன் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 13.07.22 | திருமதி. பாவாத்தாள் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 23.07.22 | திரு. ராமசாமி கவுண்டர் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 31.07.22 | திரு. V. சௌந்தரராஜன் | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 02.08.22 | திரு. ஈஸ்வரமூர்த்தி | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 10.08.22 | திரு. A.M. ராமசாமி | அரிமா M. கார்த்திக் |
| 12.08.22 | திருமதி. சகுந்தலா | அரிமா E. சத்தியமூர்த்தி |
| 13.08.22 | திரு. பழனிசாமி | அரிமா E. சத்தியமூர்த்தி |

**கண்தானம் குழுத்தலைவர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு பாராட்டுக்கள்**

# Building Future Leaders

As a whole, you spend a lot of time filling your mind with various forms of self-improvement. This is good for you! However, what is equally important is the amount of positives you send to your younger generation. You will be convinced of the positive results you receive, when you 'flood' your mind with a self-improvement book or tape. It really, can change your outlook on things. The results that you get are the same as those achieved by your youth. Why don't they take advantage of such resources? It's fairly simple. Their peer groups, as a whole, don't know about them. Thus, your teens aren't taking advantage of them.

A lot of folks out there are cutting your teens short! As such, they are turning towards things that, in the long run, don't lead to fulfilment. The question is what can be done about it?

First, you have to realise that every one was at one time or another in the same boat!



You were all teens. Now, ask yourself, who was there for you, when you needed someone to encourage you? Look for a young adult that you can reach out to and encourage. Make yourself a part of that person's testimonial! In addition to helping this person to realise their gifts, you will find extreme personal rewards, as you see this person live an enriched life!

Use your personal testimonial to make a positive impact in another's life. When you do, only ask for one thing in return. Make sure that when someone comes along in their life, they do the same. As one, you are powerless, but as many, you can change the world! One person at a time!

# பன்னாட்டுச் கூட்டு மாவட்ட செய்திகள்

LIEPC (Lions India Educational Promotion council) தலைவராக PID சம்பத்தும் Lion India Magazine ஆசிரியராக PID Dr.Nawal Malu அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்

இவ்வாண்டு நமது கூட்டு மாவட்டத்தில் இருந்து இரண்டு ஆளுநர்கள் மட்டுமே மாநாட்டில் கலந்து கொண்டனர். மற்றவர்களுக்கு விசா கிடைக்கவில்லை. நமது இயக்குநர் மதனகோபாலுக்கும் கிடைக்கவில்லை.

நமது முதல் கூட்டு மாவட்ட கூட்டம் ஆகஸ்டு 25, 26 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. அதில் பன்னாட்டு இரண்டாம் உதவித் தலைவர் பிரேஸிலை சார்ந்த Fabricio அவர்கள் தனது துணைவியாரோடு கலந்து கொண்டார்

LCIF Conclave கல்கத்தாவில் நடைபெற்றது. நமது ஏரியாவில் உள்ள அனைத்து ஏரியா தலைவர்கள், கூட்டு மாவட்ட, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

104வது பன்னாட்டு மாநாடு மாண்டிரியலில் ஜுன் 24-28 வரை கோலாகலமாக நடைபெற்றது. சுமார் 10000 பேர் கலந்து கொண்டனர்.

GAT Conclave ஆகஸ்டு 27, 29 தேதிகளில் ஹைதராபாத்தில் நடைபெற்றது.

முதல் Lions Council of India வின் கூட்டம் சென்னையில் செப்டம்பர் 9, 10 தேதிகளில் LCOI நடைபெறவுள்ளது. முன் LCCIA இருந்தது இப்போது LCOI ஆக மாற்றப்பட்டுள்ளது. அதன் தலைவராக முன்னாள் பன்னாட்டு இயக்குனர் சம்பத் பணியாற்றுவார்.

பன்னாட்டு அரிமா சங்கங்கள் சார்பில் 2022 - 23 ஆண்டுக்கான பன்னாட்டு மாநாடு கனடாவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நமது 324E மாவட்டத்திலிருந்து முன்னாள் பன்னாட்டு இயக்குனர் அரிமா Er.K.தனபாலன் அவர்களும் அவரது துணைவியார் அரிமா சசிகலா தனபாலன் அவர்களும் கலந்து கொண்டனர்.

## LCI Executive Officers

**BRIAN SHEEHAN**
International President, Bird Island, Minnesota, USA

**Dr. PATTI HILL**
International First Vice President, Edmonton, Alberta, Canada

**FABRÍCIO OLIVEIRA**
International Second Vice President, Catolé do Rocha, Brazil

**A. P. SINGH**
International Third Vice President, Kolkata, India

# மாவட்டச் செய்திகள்

மண்டல வட்டாரத் தலைவர்கள் பயிலரங்கம் 22.4.2022 கொடைக்கானல் ஹோட்டல் லி போஷ் - ல் மிக சிறப்பாக நடைபெற்றது.

முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜூலை மாதம் 24 ஆம் தேதி கொடைக்கானல் Germanus Springs ஹோட்டலில் நடைபெற்றது.

9.07.22 முதல் 10.07.22 ஆகிய தேதிகளில் வசந்தம் மலரட்டும் ஆண்டின் சங்க தலைவர்களுக்கான பயிலரங்கம் சேலம் ஹோட்டல் சிவராஜ் இன்-ல் நடைபெற்றது. பயிலரங்கத்தில் 142 சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

GAT & LCIF குழு பொறுப்பாளர்களுக்கான பயிலரங்கம் 24.4.2022 கொடைக்கானல் லீ போஷ் ஹோட்டலில் மிக சிறப்பாக நடைபெற்றது. கௌரவ விருந்தினராக 324 B மாவட்ட ஆளுநர் அரிமா T.P.ரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தலைவர் செயலர்கள் பொருளர்களுக்கான கருத்தரங்கம் 29.5.2022 ஏற்காட்டில் அமைந்துள்ள தலைமை பண்பு பயிலரங்க கட்டிடத்தில் நடைபெற்றது. 145 சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வசந்தம் மலரட்டும் ஆண்டின் முதலாவது மாவட்ட முதன்மை பொறுப்பாளர்கள் கூட்டம் 29.5.2022 தலைமை பண்பு பயிலரங்க கட்டிடத்தில் நடைபெற்றது. 107 முதன்மை பொறுப்பாளர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாவட்ட அமைச்சரவை பதவியேற்பு விழா குமாரபாளையம் எக்ஸல் கன்வென்ஷன் சென்டரில் 7.8.2022 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பதவியேற்பு விழாவின் போது நமது சங்கத்தைச் சார்ந்த மூன்றாம் உதவித் தலைவர் அரிமா S.அசோக்குமார் அவர்கள் தலைமை பண்பு அறக்கட்டளை உறுப்பினராக இணைத்துக் கொண்டார். முன்னாள் தலைவர் அரிமா பாலகிருஷ்ணன் அவர்கள் மேலும் உடனடி முன்னாள் அரிமா தங்கமுத்து அவர்கள் MJF விருதினை பெற்றார்.

இவ்வாண்டு 32 அரிமாக்கள் MJF விருதினை பெற்றுள்ளார்கள்.

செயலர்கள் பொருளருக்கான கருத்தரங்கம் 14.08.2022 அன்று ஏற்காடு தலைமை பண்பு பயிலரங்க கட்டிடத்தில் நடைபெற்றது. ‘வசந்தம் மலரட்டும்’ ஆண்டின் யூடியூப் சேனல் மிக விரைவில் துவங்கப்பட உள்ளது.




மேடைக்கு சிறப்பு விருந்தினர்களை அழைத்தப்பின் அரிமா K.C.தங்கமுத்து அவர்கள் சுப்ரீமின் 31 வது பதவியேற்பு விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழாவினை முறைப்படி துவக்கி வைத்தார். கூட்டத்தில் தமிழ்த்தாய் இசைக்கப்பட்டது.

கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைத்து முன்னாள் பன்னாட்டு இயக்குநர் துணை மாவட்ட ஆளுநர்கள் மற்றும் மாவட்ட அமைச்சரவை பொறுப்பாளர்கள் பிற சங்கப் பொறுப்பாளர்கள் சுப்ரீம் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றார் தலைவர் அரிமா K.C.தங்கமுத்து முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் : அரிமா V.விஜயகுமார் அரிமா K.சேகர், அரிமா T.பூபதி அரிமா P.மோகன், அரிமா A.P.சுப்பிரமணியம் ஆகியோர் 2021-22 ஆண்டில் சிறப்பாக சேவையாற்றிய அரிமாக்களுக்கு சங்க விருதுகளை வழங்கி வாழ்த்துரை யாற்றினர்கள், முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா K.தனபாலன் அவர்கள் 2022-23 ஆண்டிம் புதிய பொறுப்பாளர்களை பதவியில்அமர்த்தி சிறப்புரையாற்றினார்:

புதிய தலைவர் அரிமா M.ராமசாமி அவர்கள் ஏற்புரையாற்றினர். முன்னாள் ஆளுநர் அரிமா D.ரவிச்சந்திரன் அவர்கள் தமது சங்கத்தில் புதிய உறுப்பினர்களை இணைத்து வைத்து சிறப்புரையாற்றினார். நமது சங்கத்தின் சார்பாக தலைமைப்பண்பு பயிரைங்க அறக்கட்டளைக்கு இவ்வாண்டு முதல் தவணையாக ரூ.50,000 த்தை பெற்றுக் கொண்டு முன்னாள் கட்டு மாவட்டத்




தலைவர் அரிமா A.S.அரவிந்தராஜ் அவர்கள் உரையாற்றினர்.

ஒளிரும் காளமங்கலம் பவுண்டேஷன் சுப்ரீம் சங்கமும் இணைந்து கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியின் வளர்ச்சித் திட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார் மாவட்ட அமைச்சரவை முதன்மை அதிகாரி டாக்டர் அரிமா L.M.ராமகிருஷ்ணன் அவர் சமுதாய அக்கறையுடன் மக்களின் நலன்காக்கும் CCTV திட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார்.

முன்னான் மாவட்ட ஆளுநர் அரிமா S.மணி அவர் என்று எணிய மக்களின் துயர் துடைக்க Lions Happy Wall திட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினர்

முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா P.சந்திரசேகரன் அவர் முதலாம் துணை மாவட்ட ஆளுநர் அரிமா T.R. தமிழ்மணி இரண்டாம் துணை மாவட்ட ஆளுநர் அரிமா N.P.செந்தில்குமார் மாவட்ட அமைச்சரவை செயலர் அரிமா P.செங்கோட்டுவேன் மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் வட்டாரத் தலைவர் அரிமா P.ஆனந்தன் வட்டத்தலைவர் மண்ணொளித் திட்டம் அரிமா E.விஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் திட்டத் தலைவர் நன்றியுரை கூறி தலைவர் 31 வது பதவியேற்பு விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழாவினை முறைப்படி ஒத்தி வைத்தும்.

# 2 வது நிகழ்முறைக்கூட்டம்
# மண்டல சங்கங்களின் கருத்தரங்கம்







அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.

2வது நிகழ்முறைக் கூட்டமானது மண்டல சங்கம் சார்ந்த கருத்தரங்கமாக 21.07.22 அன்று இரவு 8.00 மணிக்கு இதே அரங்கில் நடைபெற்றது. மாவட்ட அமைச்சரவை பொறுப்பாளர்களை மேடைக்கு அழைத்த பின்னர் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார் தலைவர் அரிமா M.ராமசாமி அவர்கள், உலக அமைதிக்கு ஒரு நிமிடம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றாம் தலைவர், கூட்டத்தில் குழுக்களை நிணுமித்தல், வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, வருடாந்திர செயல்திட்ட அறிக்கை போன்றவைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

சென்ற நிகழ்முறைக் கூட்ட குறிப்புகளை வாசித்தார் செயலர் புதிய உறுப்பினர் திரு.சரவணன் அவர்களை மாவட்ட கண்ணொளித் திட்டத் தலைவர் அவர்கள் சங்கத்தில் இணைத்து வைத்தார். அரிமா பொத்தனை முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா P.மோகன் அவர்கள் வழங்கினார்.

கூட்டம் மண்டலத் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் அவர்கள் கூடுதலின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

சங்க அறிக்கைகள் அரிமா P.ஆனந்தன் ஆளுநர் கலைத் திட்டங்கள் அரிமா தங்க வேல் பன்னாட்டுத் திட்டங்கள். அரிமா சந்திரா ஈஸ்வரன் விருதுகள், அரிமா செந்தில் GLT, GMT, GST, LCIF மற்றும் கண்ணொளித் திட்டம் குழுக்களின் இலக்குகள் மற்றும் அரிமாக்களுக்கு வழங்கும் வெகுமதிகளை பற்றி எடுத்துரைத்தார்கள்.

மாவட்ட ஆளுநர் அரிமா P.மோகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மாவட்ட அமைச்சரவை செயலர் வாழ்த்துரையாற்றினார்.

மீண்டும் கூட்டத்தை சுப்ரீம் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. அறிவிப்புக்கு பின்னர் குலுக்கல் முறையில் அரிமாக்கள் தேர்தெடுக்கப்பட்டு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தார் செயலர் இரண்டாவது நிகழ்முறைத் கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார் தலைவர்.

# 3 வது நிகழ்முறைக் கூட்டம்

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்




*04.08.21* அன்று 3வது நிகழ்முறைக் கூட்டமானது இதே அரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் திருகடவூர் மணிமாறன் அவர்களை மேடைக்கு அழைத்த பின் தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார். கூட்டத்தில் உலக அமைதிக்கு ஒரு நிமிட மௌனம் கடைபிடிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர் சென்ற கூட்டக் குறிப்புகளை செயலர் அவர்கள் வாசித்த பின்னர்




அரிமா E.தேவராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினரை அலைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் திருகடவூர் மணிமாறன் அவர்கள் திசைமாறும் பருவக்காற்று என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.




அறிவிப்புகளை வாசித்தார். தலைவர் கூட்டத்தில் கண்தானம் பெற உதவிய அரிமாக்கள் கௌரவிக்கப்பட்டார்கள். வருகைப்பதிவு குலுக்கல் முறையில் அரிமாட்டி S.ராஜலட்சுமி அரிமா S.தனம்யோகானந் ஆகியோர் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் செயலர் அவர்கள் நன்றி கூறிய பின் தலைவர் 3 வது நிகழ்முறைக் கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார்.









# 4 வது நிகழ்முறைக் கூட்டம்

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.

18.08.22 அன்று 4வது நிகழ்முறைக் கூட்டமானது மண்டல வட்டார தலைவர்களின் வழிகாட்டுதல் கூட்டமாக இதே அரங்கில் நடைபெற்றது தலைவர் அவர்கள் கூட்டத்தை முறைப்படி துவக்கி வைத்தார்.




கூட்டத்தில் உலக அமைதிக்கு ஒரு நிமிட மௌனம் கடைபிடிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார் தலைவர், சென்ற கூட்டக் குறிப்புகளை செயலர் அவர்கள் வாசித்த பின்னர் முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா K.தனபாலன் அவர்கள் புதிய உறுப்பினர் திரு.S.திருநாவுக்கரசு அவர்கள் சங்கத்தில் இணைத்து வைத்து சிறப்புரையாற்றினார். புதிய உறுப்பினரை அரிமா S.கதிர் அவர்கள் அறிமுக செய்து வைத்தார்.




மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் ஏற்புரையாற்றினார். அறிவிப்புகளை வாசித்தார் தலைவர். கூட்டத்தில் கண்தானம் பெற உதவிய அரிமாக்கள் கௌரவிக்கப்பட்டார்கள். வருகைப் பதிவு குலுக்கல் முறையில் அரிமா V.அனுஷியா அரிமா SM.சரவணன் ஆகியோர் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் செயலர் அவர்கள் நன்றி கூறிய பின்லைவர் 4வது நிகழ்முறைக் கூட்டத்தை முறைப்படி ஒத்திவைத்தார்.



**ஒருங்கிணைந்த இயக்குநர்கள் குழுக்கூட்டம் 17.07.2022**




**இரண்டாவது இயக்குநர்கள் குழுக்கூட்டம் 08.08.2022**



# சுப்ரீம் செய்திகள்

## 75 வது சுதந்திர தினவிழா 15.08.2022



நமது சங்கத்தின் சார்பாக 15.08.22 அன்று காசிபாளையம் அரசு தொடக்கப் பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற்றது.

தலைவர் அரிமா M.ராமசாமி அவர்கள் தேசிய கொடி ஏற்றி உரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் தலைவர் அரிமா A.சுந்தரம் அவர்கள் சிறப்புரையாற்றினார். பட்டயத் தலைவர் அரிமா K.குமாரசாமி அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு, பொது அறிவு, தேசிய தலைவர் பற்றி புத்தகங்கள் புத்தகங்களும், இனிப்புகளும் வழங்கப்பட்டன.

## உணவு வழங்குதல் 18.08.2022




## ஸ்மார்ட் கிளாஸ் 05.08.2022



## மண்டல, வட்டார தலைவர்களின் வழிகாட்டுதல் கூட்ட அழைப்பிதழ் 18.8.22




## யதுன்ஸ் பெண் குழந்தைகள் காப்பகத்திற்கு உபகரணங்கள் வழங்கும் விழா 7.7.22



# ரிஸ்க் எடுத்தால்தான் வெற்றி!




பிசினஸ் உலகில் காலடி எடுத்துவைக்க நினைக்கும் ஒருவரது மனத்திடம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்ட மனப்பக்குவம் கொண்டவர்களுக்கு பிசினஸ் என்பது பொருந்திவரும்? எந்த மாதிரியான மனநிலை கொண்டவர்களுக்கு பிசினஸ் என்பது பொருந்தாது என்பதை முதலில் ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பிசினஸ் செய்வதற்கு நாம் ஏற்றவர்தானா, நம்மால் பிசினஸை நன்றாகச் செய்ய முடியுமா என்பதை முடிவு செய்ய முடியும். எப்படி இதைக் கண்டுபிடிப்பது?

நித்தியானந்தன், பரமானந்தன் என இரண்டு நண்பர்கள். இருவருமே கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். நித்தியானந்தனுக்குக் குடும்பப் பாசம் அதிகம். பெற்றோர்களையோ, உடன் பிறந்தவர்களையோ அவனால் நீண்ட நாட்கள் பார்க்காமல் இருக்க முடியாது. வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் அதில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பான்.

எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவான் என்றாலும், யாராவது அவன் மனதை நோகடிக்கிற மாதிரி ஏதாவது சொல்லிவிட்டால் அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. தன் கௌரவத்தை விட்டு யார் முன்பும் போய் நிற்பது அவனுக்குப் பிடிக்காது. வாழ்க்கையில் தனது நிலை தாழ்ந்து போவதை அவனால் கனவிலும் நினைக்க முடியாது.

பரமானந்தனுக்கும் குடும்பப் பாசம் அதிகம் தான். அதற்காக எப்போதும் அவர்களுடனேயே இருக்க வேண்டும் என்று நினைக்கமாட்டான்.

வீட்டில் நடக்கும் விசேஷங்களில் அவன் கலந்து கொள்ள விரும்பினால், அது தவிர்க்க முடியாத விசேஷமா என்று பார்ப்பான். யாராவது அவன் மனதை நோகடிக்கிற மாதிரி பேசிவிட்டால், தன் காரியம் முடிகிற வரை அதைப் பொருட்படுத்த மாட்டான். தன் கௌரவம் என்பதைவிட, தான் செய்ய நினைக்கும் வேலை முடிவதே முக்கியம் என்று நினைப்பான். வாழ்க்கை என்பதே ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டது தான் என்று அடிக்கடி சொல்வான்.

இப்போது நீங்களே சொல்லுங்கள். இந்த இருவரில் பிசினஸ் என்பது யாருக்கு அதிகம் பொருந்தும் என்று. நிச்சயமாக, பரமானந்தனுக்குத் தான்.

**மனிதர்களுடைய மனநிலையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகையினர், ரிஸ்க் எடுப்பதற்கு மிகவும் தயங்குபவர்கள். இன்னொரு வகையினர், ரிஸ்க் எடுக்கத் துணிந்தவர்கள்.** யாரோ ஒருவரிடம் தனது நேரத்தை, திறமையை, உழைப்பை விற்பதன் மூலம் வருமானத்தைப் பெற நினைப்பவர்கள் முதல் வகையினர். தனது நேரத்தை, திறமையை, உழைப்பை தான் நினைக்கிறபடி செலவழித்து, அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை அல்லது நஷ்டத்தைப் பெற நினைப்பவர்கள் இரண்டாவது வகையினர்.

வாழ்க்கையில் சிக்கல் என்பதே இருக்கக் கூடாது என்று நினைப்பவர்கள் முதல் வகையினர். காலையில் 10 மணிக்கு ஆபீஸுக்குப் போனால், மாலை 6 மணிக்கு ஆபீஸ் வேலையை முடித்துவிட்டு, வீட்டுக்குக் கிளம்பிவிட வேண்டும் என்று நினைப்பவர்கள் இவர்கள்.

மாதம் முழுக்கக் கடினமாக உழைக்கும் இவர்களின் ஒரே எதிர்பார்ப்பு, மாத கடைசியில் கிடைக்கப்போகும் சம்பளம் தான். சம்பளம் கிடைப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை என்றால். இவர்கள் வாழ்க்கையிலும் எந்தச் சிக்கலும் இருக்காது. சுருக்கமாக, மணி அடித்தால் சோறு கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் இவர்கள். ஆனால், இரண்டாவது வகை மனிதர்கள், வாழ்க்கை என்பதே சிக்கல் நிறைந்தது தான் என்று புரிந்து வைத்திருப்பவர்கள். எனவே, ரிஸ்க் எடுக்காமல் எந்தப் பெரிய பலனையும் அடைய முடியாது என்பதைத் தீர்க்கமாக நம்புகிறவர்கள்.

குறுகிய காலத்தில் கிடைக்கும் சொற்ப வருமானத்தைவிட நீண்ட காலத்தில் நிறையப் பணம் சம்பாதிக்க நினைப்பார்கள். தினம் தினம் சிக்கல் வந்தாலும், அதைத் தீர்ப்பதில் சளைக்கவே மாட்டார்கள். தோல்விகள் வரும்போதெல்லாம் சிறிது மனம் தளர்ந்தாலும், மீண்டும் நம்பிக்கையோடு எழுவார்கள். எதிர்காலத்தில் தனது நிலை தலைகீழாக மாறினாலும் மீண்டும் பூஜ்ஜியத்தில் இருந்து வாழ்க்கையைத் தொடங்க அஞ்சமாட்டார்கள்.

உங்கள் மனநிலை முதல் வகை மனிதர்களைப் போல இருக்கிறதா? அப்படியானால் பிசினஸ் என்பது உங்களுக்குச் சரிப்பட்டு வராது. உங்களால் பிசினஸில் இறங்கி வெற்றி பெற முடியாது. எனவே, நீங்கள் பிசினஸில் நுழைவதற்குப் பதில், ஏதாவது ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்வதே சரி.

உங்கள் மனநிலை இரண்டாவது வகை மனிதர்களைப் போல இருக்கிறதா? நீங்கள் தாராளமாக பிசினஸில் நுழையலாம். ரிஸ்க் எடுக்கிற துணிவு உங்களிடம் இருப்பதால், உங்களால் பிசினஸில் நிச்சயம் வெற்றிபெற்று, மிகப்பெரிய பிசினஸ் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முடியும்.

பிசினஸில் கடுமையான பல எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சிக்கல்களை தினம் தினம் இந்தச் சிக்கல்களை எதிர்கொண்டு, அதிலிருந்து மீண்டு வருகிற மனத் தைரியம் ஒருவருக்குக் கட்டாயமாக இருக்க வேண்டும். தேன் எடுக்கப் போனால், தேனீ கொட்டத் தான் செய்யும். தேனீ கொட்டுமே என்று பயந்தால், தேனை எடுக்க முடியாது. தேனீயிடம் கொட்டு படாமல், தேனை எடுத்து வருவது தான் புத்திசாலித்தனம்,

பிசினஸ் ஆரம்பித்துவிட்டால் வாழ்க்கை இன்றைக்கு இருக்கிற மாதிரியே நிம்மதியாக இருக்குமா? திடீரென நாளைக்கு பிசினஸில் நஷ்டம் வந்துவிட்டால். நானும் என் குடும்பத்தினரும் கஷ்டப்பட வேண்டியிருக்குமே! இது மாதிரியான கஷ்டங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியாதே என்று நினைப்பவர்களுக்கு, பிசினஸ் என்பது சரியான தேர்வாக இருக்காது.

மாதச் சம்பளம் பெறும் ஒரு வேலையில் இருக்கிற நிச்சயத்தன்மை பிசினஸில் இல்லை. இதனால் தான் சிலர் இன்றைக்கும் கூட பிசினஸை சூது என்கிறார்கள். நேற்று இருந்த மாதிரி இன்று இல்லையே! நாம் ஒன்று நினைக்க, நடப்பது வேறாக இருக்கிறதே என சிலர் பக்குவமில்லாமல் சொல்வதைக் கேட்டுத் தான் சொல்கிறார்கள், பிசினஸை சூது என்று சொல்கிறார்கள்

ஆனால், பிசினஸ் என்பது சூது அல்ல, சரியாகச் செய்வதன் மூலம் இன்றைக்கு அது அறிவியலாக மாறியிருக்கிறது. பிசினஸில் நாம் எடுக்கிற முடிவுகள், என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்ளப் பல வழிகள் இருக்க, பிசினஸில் தோற்றுவிடுமோ என்கிற பயம் தேவையற்றது.

## புத்தகம்

உலகிலேயே மிக அதிக புத்தகங்களை வெளியிடும் நாடு அமெரிக்கா தான். இரண்டாவது இடம் பிரிட்டனுக்கு, பத்தாவது இடம் இந்தியாவுக்கு.

## எழுத்தாளர்

நிக்கோலஸ் பிரிட்டோன் என்பவர் எழுதியுள்ள புத்தகங்கள் 203. அவற்றில் 152 புத்தகங்கள் அவர் கையால் எழுதாமல் நேரடியாக அச்சுக்கோர்த்தே முடித்துவிட்டார்.

## தேசிய சின்னம்

ஸ்பெயின், ஜெர்மனி, அல்பேனியா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் கழுதையைத் தங்களின் தேசிய சின்னமாகக் கொண்டுள்ளன.

## கொடி

தேசிய கொடியில் எழுத்து இடம் பெற்றுள்ள ஒரே நாடு ருவான்டா. இந்நாட்டுத் தேசிய கொடியின் நடுவில் ஸி என்ற எழுத்து இடம் பெற்றுள்ளது.



# தெரிந்ததும்... தெரியாததும்...!

## சமம்

மணிக்கட்டிலிருந்து நடுவிரல் நுனிவரை உள்ள நீளமும் மோவாய்க்கட்டையிலிருந்து நெற்றி வரை உள்ள நீளமும் அனைவருக்கும் சமமாக இருக்கும்.

## ஓவியம்

மேற்கு பெர்லின் ஓவியர் மைககேல் ஆஸ்வால்ட். இவர் தீட்டிய ஓவியம் 21. 30 மீட்டர் அகலமும் 12 மீட்டர் உயரமும் கொண்டது.
உலகின் மிகப்பெரிய ஓவியம் இது தான்.

## அதிசயம்

உலகின் ஏழாவது அதிசயம் பரோஸ் தீவில் கி.மு. 283 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் உயரம் 600 அடி, 1500 வருடம் ஒளி வீசிய கலங்கரை விளக்கம் ஒரு அழிந்துபோனது.

## சுதந்திரம்

இந்தியாவில் ஆகஸ்ட் 15 ஆம் தேதியிலும், சுவிட்சர்லாந்து ஆகஸ்ட் 1 ஆம் தேதியிலும், பாகிஸ்தான் ஆகஸ்ட் 14 ஆம் தேதியிலும், இந்தோனேஷியா ஆகஸ்ட் 17 லும் சுதந்திரம் அடைந்துள்ளன.

# புதிய உறுப்பினர்கள்



R.அனிதா
அரிமா D.ரவிச்சந்திரன்



A.சரவணன்
அரிமா V.சுகுமாரன்



C.பாஸ்கரன்
அரிமா R.பாலசுப்பிரமணியம்



S.பன்னீர்செல்வம்
அரிமா N.தங்கவேல்



P.கதிர்வேல்
அரிமா V.A.குணசேகரன்



G.முத்துக்குமார்
அரிமா R.பாலசுப்ரமணியம்



C.செந்தில்நாதன்
அரிமா V.சுகுமாரன்



C.பார்த்திபன்
அரிமா M.ராமசாமி



R.கோபால்
அரிமா N.வஜ்ரவேல்



S.திருநாவுக்கரசு
அரிமா S.கதிர்வேல்



P அருண்குமார்
அரிமா M.கார்த்திக்



திருமூர்த்தி
அரிமா S.அசோக் குமார்



R. வித்தியாசாகர்
அரிமா M. கார்த்திக்

**புதிய உறுப்பினர்கள் அனைவரையும்
இணைத்த அரிமாக்களுக்கு பாராட்டுக்கள்**

# இதழாசிரியர் உரை

தம்பி, தங்கச்சி, அத்தை, மாமா அக்கா, அண்ணா, தாத்தா, பாட்டி & Mydear செல்லகுட்டிஸ் எல்லாருக்கும் நன்றி. நான் இந்த வருட இதழ் ஆசிரியர் P-R-A-B-H-U பிரபு. என்னடா வணக்கத்தோட ஆரமிக்காம நன்றியோட ஆரமிக்குறேனே னு நினைக்குறீங்களா. நன்றி உணர்வோட இருக்கனும் னு வாழ்க்கைப் பாடம் கத்துக்கிட்டேன், அதுனால அத அப்டியே following. இந்த வாய்ப்பு குடுத்தமைக்கு நன்றி.

தெரியாம இருக்கிறத தெரிஞ்சுக்குறதும், தெரிஞ்சுக்குறத பகிர்ந்துகிறதும் என்னோட பழக்கம்... அதுனால இந்த இதழ்ல நம்ம அரிமா சம்மந்தமா சில விஷயங்களும், பொதுவா சில விஷயங்களும் உங்களோட பகிர்ந்திருக்கேன். சிரிக்கவும் சிந்திக்கவும் இந்த இதழ்ல சில விஷயங்கள் சேர்த்திருக்கேன். உங்களுக்கு பயன்பட்டுச்சுனா சந்தோசம், பயன்படலனா மத்தவங்களுக்கு SHARE பண்ணுங்க அவங்களுக்காவது பயன் படட்டும்.

எனக்கு பேச தெரியாது னு சொன்னா நம்புறமாதிரி இருக்காது, பேசுறது குறைவு கேட்குறது ஜாஸ்தி னு சொன்னா நம்புறமாதிரி இருக்கும். ஆக, இதோட என் உரைக்கு temporary முற்றுப்புள்ளி வெச்சுக்குறேன். இந்த இதழ் பத்தி உங்களோட கருத்துக்கள மனம் விட்டு என் கிட்ட பகிர்ந்துக்கோங்க. மனசார அத நான் ஏத்துக்குறேன்.

RJ ERODE PRABHU ன்ற என்னோட சமூக வலைத்தளங்கள்ல பகிர்ந்துக்கலாம். முடிஞ்சா ஒரு like, follow, subscribe பண்ணுங்களேன். HAPPY ஆ இருக்கும்.

குழந்தைத்தனமான பின் குறிப்பு: இந்த இதழ் படிச்சதுக்கப்றம், உங்க ஒவ்வொருத்தர் கிட்டையும் இருந்து கருத்துக்கள் எதிர்பாக்குறேன். கருத்து வந்தா நீங்க இந்த இதழ் படிச்சீங்கனு எடுத்துப்பேன் (ஒரு சின்ன சந்தோசம்), கருத்து வரலைனா நீங்க இந்த இதழ் படிக்கவே இல்லைனு எடுத்துப்பேன் (உங்க மேல வருத்தப்படுவேன், நேர்ல சந்திக்கும் போது கடிச்சுவெச்சுருவேன்)

நானும் நல்லா இருக்கேன், நீங்களும் நல்லா இருங்க. நம்ம எல்லாருமே நல்லா இருப்போம், சந்தோசமா இருப்போம், ஆரோக்கியமா இருப்போம்.

அரிமா **J. ஆனந்த் பிரபு**
இதழாசிரியர்



THE Ceedee's GROUP

VP

**Manufacturers of PP WOVEN FABRIC/SACKS for :**

- Cattle feed
- Poultry feed
- Feed Additives
- Tea
- Coffee
- Sugar
- Rice
- Fertilizers
- Cement
- Tile fixes
- PVC / UPVC Pipes
- Foam Mattresses
- Textiles
- Sago
- Oil Cakes

# Venbro Polymers

## ERODE 638 004

## Contact: 9443321809

## Mail: venbro@ceedees.com

## kn@ceedees.com

**OUR PRODUCTS**



























# THULASI READYMIX

கனவு மெய்ப்பட வேண்டும்...

Erode: 95 85 84 00 00
Salem: 97 86 35 00 00




## RR THULASI BUILDERS

Printed By : SPY Printers, Erode. 98427 29669